ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1396/4 - 2005 ජූනි 06 වැනි සඳුදා - 2005.06.06

*1396/4 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டி. - பி 21/78*

**978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 24அ (2) மற்றும் 24ஆ என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2005, மே 26.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2005.03.14 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 24ஆ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2005.06.03 ஆந் திகதிய 1395/22 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையால் அங்கீகரிக்கப்பட்டதுமான சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. சொல்லப்பட்ட கட்டளையின் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியில் கற்கை நெறியொன்றிற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் ஒவ்வொருவரும் அவரது பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்வதன்மேல் சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தின் பெயரில் விடயத்திற்கேற்ப, பட்டம் அல்லது திப்ளோமா வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவகமானது சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் ஏதேனும் பட்டத்தை அல்லது வேறு கல்விசார் சிறப்புப் பட்டத்தை வழங்குவதற்குத் தகுதியுடையதாதலும் ஆகாது ;

ஆயினும் எவ்வாறாயினும், மாணவர் ஒவ்வொருவரும் சொல்லப்பட்ட கட்டளையின் திகதிக்கு நேரமுந்திய நாளன்று சொல்லப்பட்ட கல்லூரியின் மாணவர் ஒருவராக அவரால் துய்க்கப்பட்ட வசதிகளையும் சிறப்புரிமைகளையும் தொடர்ந்து ஒய்த்தல் வேண்டும்.